இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம்
இறுதிப் பரீட்சை– 2008/2009
மட்டம் - 3
**LWU 1411** – இலங்கையின் சட்டங்களுக்கான அறிமுகம்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 24.03.2009 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.

1. "ஆள்சார் சட்டங்களில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு உரோமன் டச்சுச் சட்டத்தை நீதிமன்றங்கள் பயன்படுத்தியபோது இச்சட்டம் நாட்டின் பொதுச்சட்டமாகியது."

   உரோமன் டச்சுச்சட்ட கோட்பாடுகளை இத்தேவைகளுக்காக பின்பற்றுவதை எளிதாக்கிய நீதிமன்ற தீர்ப்புக்களுடன் தொடர்புபடுத்தி இக்கூற்றை ஆராய்க.

2. கபில கண்டியிலுள்ள சிறிபுர கன்ஸ்ரக்சன் லிமிட்டட்டின் கணக்காளனாக இருந்தான். அவனது பெற்றோர் பேராதெனிய நிரந்தர வாசிகளாக இருந்தனர். கபிலவின் தந்தை கண்டியனாக இருந்ததுடன் அம்பலாங்கொட வாசியாக இருந்த கபிலவின் தாயுடன் 1949ல் தீக திருமண ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டார். கபில அங்கு வேலை செய்து கொண்டிருக்கும் போது அதே கம்பனியில் தொழிநுட்ப அலுவலராக கடமையாற்றிய பிரியாணி என்பவளுடன் தொடர்பொன்றினை ஆரம்பித்தான். பிரியாணியின் தந்தை காலி வாசியாக இருந்ததுடன் கண்டியரான பிரியாணியின் தாயை திருமணம் செய்து கொண்டார். அவர்கள் தமது திருமணத்தை 1962ல் பொதுச்சட்டத்தின் கீழ் பதிவு செய்துகொண்டதுடன் கண்டியில் வசிக்கலாயினர். கபிலவும் பிரியாணியும் தமது திருமணத்தை கண்டியச்சட்டத்தின் கீழ் பதிவு செய்ய விரும்புகின்றனர்.

   (அ) கண்டிய சட்டத்தின் கீழ் பிரியாணியும் கபிலவும் தமது திருமணத்தை பதிவு செய்து கொள்ள முடியுமா?

   (ஆ) 1951ல் கண்டிய சட்டத்தின் கீழ் பிரியாணியின் தந்தை தனது திருமணத்தை அவளது தாயுடன் பின்ன திருமணமாக பதிவு செய்திருந்தால் உமது விடை வேறுபடுமா?

   உமது விடையானது தொடர்புடைய நியதிச்சட்ட பிரிவுகளுடனும் தீர்ப்புச்சட்டத்துடனும் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும்.

3. "கண்டியச் சட்டத்தின் இயல்பு மற்றும் ஏனையோருக்கு அதன் ஏற்புடைமை தொடர்பான பிழையான கருத்தேற்புக்கு ஆரம்பப்புள்ளியை வில்லியம் எதிர் ரொபட்சன் எனும் வழக்கின் தீர்ப்பு உருவாகியது."

   (Principles of Ceylon Law by H.W. Thambiah, page 154)

   1830 முதல் 1917 வரையிலான காலப்பகுதியில் மேலோங்கி நின்ற தீர்ப்பு சட்ட நிலைமையை இந்த கூற்று பிரதிபலிக்கின்றதா என ஆராய்க.

4. 1976ல் அம்பாறையில் வேலு தமிழ் பெற்றோருக்கு பிறந்தான். அவனுக்கு 7 வயதாக இருக்கும் போது அவனது பெற்றோர் யாழ்ப்பாணத்திற்கு சென்றதுடன் அவன் தனது கல்வியை அங்கு தொடர்ந்தான். அவன் 18 வயதில் பள்ளிப்படிப்பை முடித்துக்கொண்டு கண்டியிலுள்ள தனது மாமாவின் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்ததுடன் அங்கு வசிக்கலானான். 1998ல் அதே தோட்டத்தில் வசித்த தமிழ் பெண் பிள்ளையான மாலதியை திருமணம் செய்தான். திருமணத்தின் பின்னர் மாலதியின் பெற்றோரால் அவளுக்கு பரிசாக கொடுக்கப்பட்ட கண்டியிலுள்ள வீட்டில் அவரகள் வசிக்கலானார்கள். வேலு கிரமமாக அவனது பெற்றோருக்கு பணம் அனுப்பியதுடன் இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை தனது பெற்றோரை சென்று பார்த்து வந்தான். அவன் தனது தொழிலில் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை யாழ்ப்பாணத்திலுள்ள நிதிக் கம்பனி ஒன்றில் முதலீடு செய்தான். 2000 ஆண்டில் வேலு யாழ்ப்பாணத்தில் ஒரு வீட்டை வாங்கியதுடன் தான் எதிர்காலத்தில் வந்து யாழ்ப்பாணத்தில் வாழ்க்கையைத் தொடங்கும் வரை தனது பெற்றோரை அங்கு வசிக்கும்படி கேட்டுக்கொண்டான்.

   தம்பதியர் இருவருக்கும் இடையேயான தொடர்ச்சியான சண்டையின் விளைவாக 2001ல் வேலு தனது மனைவியை விட்டுவந்து யாழ்ப்பாணத்திலுள்ள தனது பெற்றோருடன் வசிக்கலானான். மாலதி தமது மணஇல்லமான கண்டி வீட்டில் வசிக்கலானாள். 2002ல் யாழ்ப்பாணத்தில் வேலு கட்டடம் ஒன்றைக்கட்டி பலசரக்கு கடை ஒன்றை ஆரம்பித்தான். 2008ல் வேலு திடீரென மரணமடைந்தான்.

   வேலுக்கு எந்த சட்டம் ஏற்புடையதாகும் என அறிய அவனது பெற்றோர் விரும்புகின்றனர். அவர்களுக்கு அறிவுரை செய்க.

5. "சட்ட நிலமைகளின் முரண்பாடு மற்றும் சட்ட பிரயோகத்தின் விதிமுரண் தன்மை ஆகியன சட்டவாக்கம் மற்றும் நீதிமுறை தலையீட்டினூடாக மாத்திரமே குறைக்கப்பட முடியும்."

   இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா உமது விடைக்கான காரணங்களை தருக.

6. கீழ்வரும் நிலைமைகளுக்கான சட்டத்தீர்ப்புகளை தீர்ப்புச்சட்டம் மற்றும் நியதிச்சட்ட பிரிவுகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.

   (அ) சொனாரா எனும் முஸ்லீம் பெண்மணி காதர் எனும் முஸ்லீம் வைத்தியரை 1990 ல் திருமணம் செய்து சொண்டாள். 1992 ல் சொனாரா ஜெப்றி எனும் ஆண் குழந்தையை பெற்றெடுத்தாள். 1997ல் ஜெப்றி கண்டியிலுள்ள ஆண்பிள்ளைகளுக்கான பிரபல பாடசாலை ஒன்றில் சேர்க்கப்பட்டான். காதர் சொனாராவையும் ஜெப்றியையும் விட்டுவிட்டு இன்னுமொரு திருமணம் செய்துகொண்டான். 2008 சொனாரா தனது கணவருக்கு எதிராக தனது மகனின் பராமரிப்புக்காக வழக்கொன்றை தொடர்ந்தாள். ஜெப்றிக்கு பராமரிப்புக்கு செலுத்த தான் பொறுப்புடையவன் அல்லன் என காதர் கூறுகின்றான்.

   (ஆ) பண்டார திருமணமான ஆண் என்பதுடன் கங்கா திருமணமாகாதபெண். அவர்கள் இருவரும் இஸ்லாம் மதத்திற்கு மாறியதுடன் தமது திருமணத்தை 2007ல் முஸ்லீம் சட்டத்தின் கீழ் பதிவு செய்தனர்.

   (இ) பாத்திமாவை திருமணம் செய்த செனீப் ஒரு முஸ்லீம் ஆவான். அவன் பொதுச்சட்டத்தின் கீழ் கயானி எனும் சிங்களப்பெண்ணை இரண்டாம் முறையாக திருமணம் செய்து கொண்டான்.

7. சுதந்திரத்திற்கு பின்னைய காலப்பகுதியின் நீதி நிருவாகம் மற்றும் நீதிமன்றமுறை என்பவற்றினது பாரிய மாற்றங்கள் பற்றி முழுமையான குறிப்பொன்று வரைக.

8. (அ) ஆரம்ப காலனித்துவ காலத்தில் கண்டிய இராச்சியத்தின் கீழ் நீதிமுறை அங்கங்களுக்கும் அலுவலர்களுக்கும் நீதி நிருவாகம் தொடர்பில் வழங்கப்பட்ட அதிகாரம் பற்றி ஆராய்க.

   (ஆ) ஒவ்வொரு நீதிமன்றமும் பிரயோகித்த நியாயாதிக்கம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி டச்சுக்காலப்பகுதியில் பிரயோகிக்கப்பட்ட நீதிமன்ற பதவணி முறையை விபரிக்குக.

(பதிப்புரிமையுடையது)

OPEN UNIVERSITY OF SRI LANKA
LIBRARY